RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s213

OPEN ACCESS

# முருகன் தொன்மம் - நெறி நின்றார் நீடு வாழ்வார் - சமயமும் சமய நெறியும்

**க. மணிவாசகம்** [அ, *]

[அ] தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Murugan myth - Morality stands and lives long - Religion and religious norms

**K. Manivasagam** [a, *]

[a] School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: manivasagamkaru@gmail.com

Received: 04-01-2021
Revised: 16-04-2021
Accepted: 18-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Ideological forms have been one of the cultural forms of human dialectics. When ideologies were designed to develop human psychology, all the functional forms of human movement were formed with the focus of the ideology. In that respect, the ideological invasion and its cult ivory have been carried out all over the world. In the broad era, vedic cultural creations and ideologies dominated the ideological forms of the landscape or the aboriginal peoples. They were also built up as the first and the highest. The arrival of aryans and the spread of Aryan culture led to the creation of many myths in the form of a number of north Indian gods with Muruga. The myths of murugan's birth were created. Thirumurukaattupadai mentions many myths. All these myths are related to murugan myths and are made to speak the specialities of Muruga. It is not the Tamil tradition to build myths and worship myths as gods. Yet myths were widely distributed in Tamil nadu and myths were accepted by the Tamil people as worship gods.

**Keywords:** Human dialectics, Thirumurukaattupadai, Aryan culture, Human psychology.

## முன்னுரை

மனிதப் பரிணாம வளர்ச்சியில் பண்பாடுகள் மனித இனத்தை அடையாளப்படுத்துகின்றன. உலகெங்கிலும் உள்ள மனித இனங்கள் தங்களுக்கென பண்பாடுகளை உருவாக்கி வாழ்வியலை அமைத்துக் கொண்டன. காலமும் மனிதத் தேவையும் மனிதனின் வளர்ச்சி அல்லது இயக்கத்தைத் தீர்மானித்தபோது அவை பற்றிய புரிதல் முக்கியமானதாக இருந்தது. மனித இயங்கியலில் இடம்பெறும் பண்பாட்டு வடிவங்களுள் ஒன்றாக கருத்தியல் வடிவங்களும் இருந்துள்ளன. கருத்தியல்கள் மனித உளவியலை ஆக்கரமித்தபோது மனித இயக்கத்தின் செயல்பாட்டு வடிவங்கள் அனைத்தும் கருத்தியலை மையமிட்டே அமைக்கப்பட்டன. அந்தவகையில் கருத்தியல் படையெடுப்பும் அதன் வழிப்பட்ட பண்பாட்டு ஆக்கரமிப்புகளும் உலகெங்கிலும் நடந்துள்ளன. அகண்ட பாரதத்தில் வேதநெறிபட்ட பண்பாட்டு ஆக்கங்களும் கருத்தியல்களும் நிலஅமைப்பு சார்ந்த அல்லது பூர்வக்குடி மக்களின் கருத்தியல் வடிவங்களின் மீது ஆதிக்கம் செலுத்தின. மேலும் அவையே முதன்மையானது, மேன்மையானது என்றும் கட்டமைக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவின் சாதியப் படிநிலைகளுக்கும்

மனித ஏற்றதாழ்வுகளுக்கும் பிராமணிய கருத்தாக்கங்களே (மனு) காரணமாகியிருக்கின்றன. சமயம்சார் நடவடிக்கைகளில் வடமரபின் தொன்ம உருவாக்கங்களும் அவற்றின் கருத்தாக்கங்களும் அகன்ற பாரதம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தின. அத்தோடு அவற்றின் இயங்கு தளத்தில் அனைத்துச் சமூகங்களும் தன்னை தகவமைத்துக் கொள்வதற்கான நடைமுறைகளும் சாத்தியப்படுத்தப்பட்டன. பாரதம் முழுவதும் பார்ப்பனிய வேதப்பண்பாடு கலவாத சமூகங்களைக் காண்பது அரிது. தமிழ்நிலம் சார்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகளில் இன்றளவும் பார்ப்பனியப் பண்பாடே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நிறுவனமயமாக்கப்பட்ட சமயக் கருத்தாக்கங்கள் தமிழ்நிலத்தில் உருவாகவில்லை. அந்த இடைவெளியை இட்டு நிரப்பும் வகையில் வடஇந்தியத் தொன்மக் கதைகள் தமிழ்நிலம் முழுவதும் ஆக்கரமித்தன. இதன் அடிப்படையில் முருகன் தொன்மக் கதையாக்கங்களையும் அவை தமிழ்நிலத்தில் செலுத்திய ஆளுமைகளையும் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சமய உருவாக்கத்தின் தேவையும் வளர்ச்சியும்

சமயம் மனிதனை நல்வழிப்படுத்துகிறது என்பதோடு அவனுக்கானப் பாதுகாப்பையும் தருகிறது என்னும் உளவியல் சிந்தனையோடு சமயத்தின் தேவை பற்றிப் புரிந்துகொள்ளப்பட்டது. மனிதப் பரிணாம வளர்ச்சியின் தொடக்ககாலத்திலிருந்தே மனிதச் சிந்தனையின் உளவியல் காரணங்களுக்காக நம்பிக்கைச் சார்ந்த வழிபாட்டு முறைகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்நிலவுலகில் மனிதன் தவிர்த்து மற்ற உயிரினங்களும் வாழ்கின்றன. ஆனால் அவற்றிடம் இல்லாத நம்பிக்கைகள், வழபாட்டு மரபுகள் மனிதனிடம் மட்டும் இருப்பதற்கு காரணம் மனிதன் இயற்கை மீது கொண்ட அச்சமாகும். இடி, மின்னல், பெருவெள்ளம் இவற்றின் பாதிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவை பற்றிய புரிதல் தேவைப்பட்டது. இந்நிலையில்தான் அவற்றை வழிபட்டால் இயற்கை சீற்றத்திலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியும் என்று உணர்ந்து மனிதன் இயற்கை வழிபாட்டை முன்னெடுத்தான். “தன்னால் தீர்க்க இயலாத பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்கையில் இத்தகு சிந்தனையே மனிதனை உய்விக்கும் பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுகிறது. இவ்வாறான சிந்தனையே கடவுள் நம்பிக்கையும் சமயமும் தோன்றுவதற்கு ஊற்றுக் கண்ணாயிற்று. சூழலில் தனக்கு அச்சமூட்டுவதாகக் காணப்பட்ட அனைத்தையும் திருப்திப்படுத்த வேண்டி அவற்றை மனிதன் வழிபடத் தொடங்கியதால் எண்ணற்ற கடவுள்களை வழிபடும் முறையும் பல சமயங்களும் தோன்றின. இவ்வாறாகக் கொடிய உயிரினங்களான பாம்பு, புலி, சிங்கம் முதலானவையும் மலை, காடு, கடல் போன்றவையும் வழிபாட்டுப் பொருட்களாயின. கால வளர்ச்சியில் இயற்கை வழிபாட்டின் ஊடே முன்னோர்கள் வழிபாடும் வழக்கத்திற்கு வந்துள்ளது. கூட்டமாக வாழ்ந்த மனிதக் குழுவில் எல்லோரையும் வழிநடத்திய ஒருவன் இறந்தப்பிறகு அவனை வழிபடுகின்ற மரபு தோன்றியிருக்கிறது. “இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும். இதிலிருந்தே சமயம் தோன்றியது என்பது ஒருவகை வாதம். அதாவது, இவ்வுலக வாழ்வு இம்மை மறுமை கொண்டது, பல பிறப்புக்களைக் கொண்டது, ஒரு பிறவியில் செய்வது மறுபிறவியில் அமையும் வாழ்வுக்குக் காரணமாகிறது ஒரு பிறவியில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது போன்ற நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன” (Baktavatchala Bharathi, 2005) என்பார் பக்தவத்சல பாரதி. உலகத்தில் சமயங்களின் தோற்றங்கள் குறித்து ஆய்வு செய்த அறிஞர்கள் சமயங்களின் தோற்றப் பின்புலத்தைப் பல்வேறு கோட்பாடுகளின் மூலம் வரையறை செய்துள்ளனர். 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மானிடவியல் அறிஞர் எட்வர்டு பர்னர் டைலர் ஆவி வழிபாட்டின் மூலமே சமயம் தோற்றம் பெற்றது என்பார். இவ்வாய்வினைத் தொடர்ந்து பல்வேறு ஆய்வுகள் சமயத் தோற்றம் குறித்து நிகழ்த்தப்பட்டன. ஆர்.ஆர்.மாரட் உயிர்ப்பாற்றல் வழிபாடு என்னும் கோட்பாட்டையும், மேக்ஸ் முல்லர் இயற்கை வழிபாடு என்னும் கோட்பாட்டையும், துர்க்ஹைம் குலக்குறி வழிபாடு என்னும் கோட்பாட்டையும், புத்தாய்வாளர்கள் போலி உருவ வழிபாடு என்னும் கோட்பாட்டையும், டைலர் மற்றும் ஹெர்பர்ட் ஸ்பென்சர் முன்னோர் வழிபாடு என்னும் கோட்பாட்டையும் உருவாக்கினார்கள். இவ்வாறு உலகெங்கிலும் உள்ள மக்கள் ஏதோவொரு வகையில் வழிபாட்டு முறையை மேற்கொண்டுள்ளனர். அதுவே பின்னாளில் சமயமாக உருப்பெற்றிருக்கிறது.

## முருகணங்கு

அணங்கு என்னும் அச்சம் தரக்கூடிய வருத்தும்தெய்வம் பற்றிய கருத்தாக்கம் சங்ககால மக்களிடம் இருந்துள்ளது. தமிழ் வழிபாட்டு மரபில் அணங்கு வழிபாடும், கொற்றவை வழிபாடும் மட்டுமே இருந்துள்ளன. இவ்விரு வழிபாடுகளும் பேய் வழிபாட்டின் எச்சமாகவே இருக்கின்றன. குறிப்பாக இவ்விரு தெய்வங்களும் பேயுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளன. போர்க்கடவுளாகச் சொல்லப்படும் கொற்றவையைப் பேய்களின் தலைமையாகச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. கொற்றவைக்கு ஏவல் செய்பவர்களாக பேய்கள் இருந்துள்ளன என்பதை,

"பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு" (கலி.89:8)

என்னும் பாடல் சுட்டுகிறது.

அணங்கு பேயின் வளர்நிலை என்றே கொள்ளப்படுகிறது. பேய் அணங்கியது என்பதிலிருந்தே அணங்கு என்னும் கருத்துநிலை உருவாக்கப்பட்டது. பேயின் இயங்கு தன்மை போன்றே அணங்கிற்கும் இயங்கு தன்மை உண்டு. பேய் போன்றே அணங்கு வேண்டிய உரு ஏற்கும் என்பதை,

"பானாட் கொண்ட கங்கு லிடையது

பேயும் அணங்கும் உருவுகொண் டாய்கோற்" (மதுரை.630-632)

என்னும் பாடல் புலப்படுத்துகிறது. "ஆவிகள் குறித்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அணங்கு என்ற தெய்வம் உருவாக்கப்பட்டுள்ளது" (Sivasubramaniyan, 1999) என்பதிலிருந்து அணங்கு ஆவி வழிபாட்டின் குறியீடாக இருக்கிறது என்பதை அறியமுடிகிறது. அணங்கின் நீட்சியாக அச்சம் தரக்கூடிய தெய்வங்களாக சூர், சூரரமகளிர், வரையர மகளிர், வானுறை மகளிர், அந்தர மகளிர், வானவ மகளிர், வானர மகளிர் போன்ற தெய்வங்களைச் சங்க இலக்கியம் சுட்டுகிறது. அணங்கின் வளர்நிலையில் முருகணங்கு என்று பொதுவாக அறியப்பட்ட தெய்வம் முருகன் என்று ஆண் பண்பேற்றம் செய்யப்பட்டது.

முருகு வழிபாடு என்பது வேலன் வெறியாட்டுடன் தொடர்புடையதாக மட்டுமே பழந்தமிழர்களிடம் இருந்துள்ளது. வேலன் வெறியாட்டு சடங்கில் படைக்கப்பட்ட பொருட்கள் பற்றிச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இச்சடங்கில் மறியறுத்தல் முக்கிய நிகழ்வாக இருந்துள்ளது என்பதை,

"மறிக்குரல் அறுத்துமங் தினைப்பிரப்பு இரீஇச்

செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்கத்" (குறுந்.263:1-2)

என்னும் பாடல் எடுத்துக்காட்டுகிறது. வேட்டைச் சமூகத்தின் எச்சமாகவே மறியறுத்தல் நிகழ்வு அமைகிறது. முருகும், முருகனும் தமிழ்ப் பண்பாட்டின் மையமாக இருந்த நிலையை மாற்றி வேதக் கடவுளர்களுடன் தொடர்புபடுத்திப் பண்பாட்டுச் சிதைவை ஏற்படுத்திவிட்டனர். "சங்க காலத்தில் நிலம் பற்றி வாழும் தமிழ்ப் பழங்குடிமக்கள் முருகனை வழிபட்ட முறைக்கும், நாகரிக மக்கள் (நகரத்தைச் சார்ந்தோர், ஆரியப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டோர்) வழிபட்ட முறைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. முன்னவர் வழிபாட்டில் வெறியாடலுக்குரிய கடவுளாகவும், பின்னவர் வழிபாட்டில் மறைவழி நிகழும் வேள்வித் தெய்வமாகவும் முருகன் திகழ்கின்றான்" என்பர் (Ramalingam, 1988). திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் முருகனைத் தொன்மக் கடவுளாக (ஆ;வா) மாற்றி அதாவது முருகனுக்குப் பிறப்பு வரலாறு கூறி வைதிக தெய்வமாக (வேதவேள்விக் கடவுள்) அடையாளப்படுத்துகின்றன. "வைதிகத்தின் தாக்கம் காரணமாக முருக வணக்கம் வடபுலத்தின் ஸ்கந்த வணக்கத்தோடு இணைக்கப்பட்டது. சிவ-பார்வதி குடும்பத்தில் முருகன் சுப்பிரமணியாக, இளைய பிள்ளையாராக முருக வணக்கம் மாற்றமுற்றது" என்பர்.

வைதிக கருத்தாக்கத்தைப் பரப்ப நினைத்தச் சங்கப் புலவர்களில் சிலர் தொன்மக் கதைகளைத் தனது பாடல்களில் பதிவு செய்துள்ளனர். தொன்மம் சமூகவியல் சார்ந்தும், இலக்கிய ஆக்கம் சார்ந்தும் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

"செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த" (குறுந்.1:1)

என்னும் பாடலில் அசுரர், தேவர் என்ற கருத்தாக்கம் பற்றிய பதிவு இடம்பெற்றுள்ளது.

"முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போலநின்" (நற்.82:4)

என்னும் பாடலில் முருகன், வள்ளி கணவன் மனைவி என்னும் உறவுத் தொன்மம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தாக்கங்களின் வளர்நிலையில் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் முருகன் பற்றிய பல தொன்மக் கதைகளைப் பதிவு செய்துள்ளன.

## திருமுருகாற்றுப்படைக் கட்டமைக்கும் முருகன் தொன்ம அரசியல்

தமிழச் சமூகத்திற்குள் ஆரியர் வருகை என்பது பண்பாட்டுப் படையெடுப்பாகவே இருந்திருக்கிறது. வேதவழிப்பட்ட கடவுளர்களின் ஆதிக்கம் தமிழ்ச் சமூகம் முழுவதும் பரவியிருந்தது என்பதை ஒரு சில பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. "மேற்கண்ட உருவ அமைதி ஆரியக்கடவுளான கார்த்திகேயனுடையது. திராவிடரின் கடவுளான முருகனுக்கும், பார்ப்பனருக்கும் யாகங்களுக்கும் ஒருவகையான தொடர்பும் இல்லை. ஆனால் மேற்கூறப்பட்ட திருமுருகாற்றுப்படைப் பகுதியில் அவன் பார்ப்பனர் பாதுகாவலனாகக் கூறப்படுகின்றான் என்று குறிப்பிட்டுத் திருமுருகாற்றுப்படை தமிழ்நாட்டு முருகனை ஆரியக்கடவுளான கார்த்திகேயனோடு தொடர்புபடுத்தியுள்ளதாக அறிஞர் கருதுவர். எனவே பண்பாட்டுக் கலப்பினால் முருகனது புராணக்கூறுகளும் வளர்ச்சியுறுவதை இதனால் அறிகின்றோம்" என்பர் (Ramalingam, 1988). தொன்மப் பரவலாக்கத்தின் வீரியத்தை, அதன் இயங்கியல் தன்மையை திருமுருகாற்றுப்படை விரிவாக பேசுகிறது. ஆரியர் வரவும், ஆரியப் பண்பாட்டுப் பரவலாக்கமும் பல வடஇந்தியக் கடவுள்களை முருகனுடன் இணைத்துப் பல்வேறு தொன்மக் கதைகளை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தன. குறிப்பாக முருகன் பிறப்பு கடவுளாக்கப்படுவதற்கான தொன்மக் கதைகள் உருவாக்கப்பட்டன.

"அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பிற் பழையோள் குழவி" (திரு.255-259)

என்னும் பாடல் அடிகளில் மலைமகள், கார்த்திகை மாதர், கொற்றவை, பழையோள் போன்றோர் முருகனின் தாயாராக கட்டமைக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது.

"பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்கு" (பெரும்.458:459)

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகள் முருகனின் தாய் துணங்கையஞ்செல்வி என்று சுட்டுகிறது.

திருமுருகாற்றுப்படை பல்வேறு தொன்மக் கதைகளைக் குறிப்பிடுகிறது. இத்தொன்மக் கதைகள் யாவும் முருகன் தொன்மக் கதைகளுடன் தொடர்புபடுத்தி முருகனின் சிறப்புக்களை எடுத்து மொழிவதாக ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. தொன்மக் கதைகளைக் கட்டமைப்பதும், தொன்மங்களைக் கடவுளாக வழிபடுவதும் தமிழ் மரபன்று. இருந்தும் தமிழ்நிலத்தில் தொன்மங்கள் பரவலாக்கம் செய்யப்பட்டதால் தொன்மங்கள் வழிபடு கடவுள்களாக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

"அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்" (திரு.59)

என்று அசுரர்களைப் பற்றியும்

மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே" (திரு.103)

என்று முருகன் மனைவி வள்ளி பற்றியும்

"புள்ளணி நீளகொடிச் செல்வனும் வெள்ளேறு" (திரு.151)

என்று திருமால் பற்றியும்

"உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்" (திரு.153-154)

என்று உமை, முப்புரம் எரித்த உருத்திரன் பற்றியும்

"நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்" (திரு.155-159)

என்று இந்திரன், திருமகள் பற்றியும்

"நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய" (திரு.160)

என்று அயன், திருமால், உருத்திரன், இந்திரன் பற்றியும்

"நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு" (திரு.167)

என்று முப்பத்து மூன்று தேவர்கள் பற்றியும்

"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்" (திரு.175)

என்று முருகன் மனைவி தெய்வானை பற்றியும் எனப் பல்வேறு தொன்மக் கதைகளைத் திருமுருகாற்றுப்படை பதிவு செய்துள்ளது.

மிகப்பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தொன்மக் கதைகள் தமிழகத்தில் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழ் மரபிற்குத் தொடர்பில்லாத தொன்மக் கதைகளைக் கட்டமைத்துப் பரவலாக்கம் செய்வதன் மூலம் இருப்பிற்கான அரசியல் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு தமிழ் நிலத்திற்கானப் பூர்வீகப் பண்பாட்டு வடிவங்கள் எல்லாம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதற்கான ஆக்கப் பணிகளைப் பண்பாட்டுப் பரவலாக்கத்தின் மூலம் சாத்தியப்படுத்தியுள்ளனர் வடபுலத்தினர். வழிபாட்டு மரபுகளைக் கடந்து வீடுபேறு என்னும் கருத்துநிலையை உருவாக்கி அதை நோக்கிப் பயணிக்க வைப்பதற்கான அனைத்துப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன என்பதைத்தான் தொன்மப் பரவலாக்கம் காட்டுகிறது.

"குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்" (திரு.281)

என்றும்

"ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்" (திரு.293-294)

என்றும் முருகன் வீடுபேற்றினைத் தந்தருளுவான் என்கிறது திருமுருகாற்றுப்படை. தமிழ் மன்னர்களும் வடபண்பாட்டை ஏற்றுக் கொண்டு அதன் வழியில் செயல்பட்டுள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. தமிழகத்தில் வடபண்பாட்டு ஆதிக்கமும் அரசியலும் நிறைந்திருந்த நிலையைத் திருமுருகாற்றுப்படை எடுத்து மொழிகிறது.

வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்கே சமயமும் அது சார்ந்த சிந்தனைகளும் என்றபோதிலும்கூட ஆதிக்க, அதிகார மனநிலைகள் அதிகார அரசியலை நிலைநிறுத்துவதற்காகப் பல்வேறு சமயங்களையும் தொன்ம ஆக்கங்களையும் உருவாக்கியுள்ளன.

## முடிவுரை

தொடக்கத்தில் உலகம் முழுவதும் வழிபாட்டு மரபுகள் அச்சத்தின் காரணமாக இயற்கை வழிபாடாகவே இருந்துள்ளது. கால வளர்ச்சியில் வழிபாடுகள் முன்னோர்கள் வழிபாடாகவும்,

உயிர்பாற்றல் வழிபாடாகவும் வளர்ந்துள்ளன. இவ்வழிபாட்டு மரபின் தொடர்ச்சிதான் தொன்ம உருவாக்கம். பழங்காலத்தில் தொன்மக்கதைகள் பெரும்பாலும் வடமரபு சார்ந்து உருவாக்கப்பட்டு அகன்ற பாரதம் முழுவதும் பரவலாக்கம் செய்யப்பட்டது. அந்த வகையில் முருகன் தொன்மமும் கட்டமைக்கப்பட்டது. வேலன் வெறியாட்டோடு தொடர்புடைய அணங்கு, முருகணங்கு முருகன் தொன்மக் கதையின் மூலம் வழிபடு கடவுளாகப் பண்பேற்றம் செய்யப்பட்டுள்ளது. சங்கத் தனிநிலைப் பாடல்களில் தொன்மப் கதைகள் குறைந்த அளவில் இருந்தாலும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்கப் பாடல்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. இத்தொன்மப் பரவலாக்கத்தின் மூலம் வடபண்பாடு தமிழக நிலப்பரப்பில் தன்னைத் தகவமைத்துக் கொண்டதோடு தமிழ்ப் பண்பாடாகவே இன்றளவும் கொண்டாடப்படுவதற்கான வழிவகைகளைச் செய்துள்ளது.

## References


Baktavatchala Bharathi, (2005) Anthropological Principles-First Edition, Vallinam, Puducherry, India

Ramalingam, N., (1988) Kanda Puranam Research, Department of Editions, Madurai Kamaraj University, Madurai, India

Sivasubramaniyan, A., (1999) Mantra and Rituals (Second Edition), Makkal Veliyedu, Chennai, India



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License